**வரையறுக்கப்பட்ட நெட் வெல்த் செக்யூரிட்டீஸ் கம்பனியின் கொடுக்கல் வாங்கல்கள் அறிக்கை - 2024**

---

வரையறுக்கப்பட்ட நெட் வெல்த் செக்யூரிட்டீஸ் கம்பனியின் 2024 திசெம்பர் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டின் செயற்பாட்டு நடவடிக்கைகள் தொடர்பாக இலங்கை சனநாயக சோஷலிச குடியரசின் அரசியலமைப்பின் 154(1) உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும் என கருதுகின்ற கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

**1.2 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக முகாமைத்துவத்தினதும் ஆளுனர் தரப்பினரினதும் பொறுப்புக்கள்**

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் சகல கணக்காய்வு நடவடிக்கைகளும் மேற்கொள்கின்ற நிறுவனத்தால் அந்த நிறுவனம் தொடர்பாக வருடாந்த மற்றும் காலரீதியில் நிதிக்கூற்றுக்கள் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சுய வருமானம், செலவினம் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய பிரகாரம் பதிவேடுகள் மற்றும் அறிக்கைகள் பேணிச் செல்லப்படல் வேண்டும். அந்த சட்டத்தின் 16(2) இன் பிரகாரம் சகல கணக்காய்வு நடவடிக்கைகளும் மேற்கொள்கின்ற நிறுவனம் தொடர்பான வருடாந்த நிதிக்கூற்றுக்கள், விதிகளின் மூலம் காண்பிக்கின்ற வகையில் காலஎல்லையில் அந்த நிறுவனங்களின் வருடாந்த செயலாற்றல் அறிக்கையுடன் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரால் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்படல் வேண்டும். அந்த சட்டத்தின் 38(1)(ஈ) பிரிவின் பிரகாரம் ஆண்டறிக்கை மற்றும் ஏனைய நிதிக்கூற்றுக்கள் தேவையான நேர காலத்தில் தயாரிப்பதை உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன், அதற்கு மேலதிகமாக கணக்காய்வு செய்யப்படுகின்ற நிறுவனத்திற்குரிய ஆண்டறிக்கை பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கு பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் கவனத்தில் கொள்ளல் வேண்டும்.

**2. நிதிக்கூற்றுக்கள்**

**2.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்**

2021 நவம்பர் 16 ஆம் திகதிய 01/2021 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் மூலம் வெளியிடப்பட்ட பொது முயற்சிகளுக்கான செயற்பாட்டு வழிகாட்டியின் 6.6 ஆம் பிரிவின் பிரகாரம் கணக்காண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் நிதிக் கூற்றுக்கள் மற்றும் வரைவு ஆண்டறிக்கை என்பன கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், 2023 மற்றும் 2024 ஆண்டுகளுக்குரிய பணிப்பாளர் சபையால் அங்கீகரிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்கள் இந்த அறிக்கை திகதி வரையிலும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**2.2 சொத்துக்கள், பொறுப்புக்கள், வருமானம் மற்றும் செலவினம்**

கம்பனியால் இறுதியாக தயாரித்த 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்படுகின்ற சொத்துக்கள், பொறுப்புக்கள், வருமானங்கள் மற்றும் செலவினங்கள் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| நிதிக்கூற்றுக்களின் விடயங்கள் | பெறுமதி |
|---|---|
| | ரூபா |
| சொத்துக்கள் | |
| நடைமுறையல்லாச் சொத்துக்கள் | - |
| நடைமுறைச் சொத்துக்கள் | 580,452,256 |
| | --------------- |
| **மொத்த சொத்துக்கள்** | 580,452,256 |
| | ======== |
| உரிமை மூலதனம் மற்றும் பொறுப்புக்கள் | |
| உரிமை மூலதனம் | 511,215,256 |
| **மொத்த பொறுப்புக்கள்** | 69,237,000 |
| | ========= |
| மொத்த உரிமை மூலதனம் மற்றும் பொறுப்புக்கள் | 580,452,256 |
| | ======== |
| மொத்த வருமானம் | 150,551,161 |
| மொத்த செலவினம் | 445,548,211 |
| | ---------------- |
| **பற்றாக்குறை (வரிக்கு முன்)** | (294,997,050) |
| | ======== |

**03. கம்பனியைக் கலைத்தல்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| லலித் அத்துல்த முதலி மஹபொல உயர் கல்வி புலமைப்பரிசில் நிதியத்தின் துணைக் கம்பனியான வரையறுக்கப்பட்ட நெசனல் வெல்த் கோப்பரேசன் கம்பனியால் ரூபா 20,000,070 (சாதாரண பங்குகள் 20,000,007) ஆரம்ப முதலீட்டினை மேற்கொண்டு அந்தக் கம்பனியின் துணைக் கம்பனியாக வரையறுக்கப்பட்ட நெட் வெல்த் செக்யூரிட்டீஸ் கம்பனி 2003 யூன் மாதம் 23 ஆந் திகதி ஸ்தாபிக்கப்பட்டது. 2022 திசம்பர் 31 ஆம் திகதி வரையில் வரையறுக்கப்பட்ட நெசனல் வெல்த் கோப்பரேசன் கம்பனியால் வரையறுக்கப்பட்ட நெட் வெல்த் செக்யூரிட்டீஸ் கம்பனியில் 117,500,007 பங்குகளில் ரூபா 1,175,000,070 முதலீடு செய்யப்பட்டிருந்தது. கம்பனியால் 2012-2017 காலப் பகுதியில் சேமிப்புப் பத்திர கொடுக்கல் வாங்கல்களில் போதியளவான இலாபம் பெறப்படாதிருந்ததுடன் கவத்திற்கொள்ளக்கூடிய நட்டம் பெறப்பட்டிருந்தது. மேலும் 2020 திசம்பர் 01 | நெட் வெல்த் செக்யூரிட்டீஸ் கம்பனியால் நிதி முறைகேடுகள் தொடர்பாக 02 வழக்குகள் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தால் தொடரப்பட்டுள்ளமையால் அந்த வழக்குகள் முடிவடையும் வரை கம்பனியைக் கலைத்தல் தாமதமடைந்துள்ளது.<br><br>பணிப்பாளர் சபையால் அங்கீகரிக்கப்பட்ட கம்பனியின் பங்கு மூலதனத்தை குறைப்பதற்கு முன்மொழிப்பட்டதுடன் அதன் இறுதித் தீர்மானம் மாஹபொல நிதியத்தின் | அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | |
|---|---|
| ஆந் திகதி முதல் அமுல்படும் வகையில் ஆரம்ப கொடுக்கல் வாங்கல்களுக்காக கம்பனிக்கு வழங்கப்பட்டிருந்த அனுமதியை நீக்குவதற்கு இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையினால் தீர்மானிக்கப்பட்டிருந்தது. இந்தக் காரணத்தின் அடிப்படையில் 2021 மார்ச் 02 ஆம் திகதிய இலக்கம் அமப/21/0269/313/012 என்ற அமைச்சரவைத் தீர்மானத்தின் மூலம் கம்பனியைக் கலைப்பதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது. எனினும் 2025 ஒக்டோபர் 31 ஆந் திகதி வரையிலும் கலைப்பதற்காக கலைப்பாளர் ஒருவர் நியமிக்கப்பட்டிருக்கவில்லை. | அங்கீகாரத்திற்காக அனுப்பப்பட்டுள்ளது. அந்த அங்கீகாரம் கிடைத்தவுடன் பங்கு மூலதனத்தை குறைத்து கலைப்பாளர் ஒருவரை நியமிப்பதற்கோ அல்லது பங்குகளை பொருத்தமான முதலீட்டாளருக்கு கையளிப்பதற்கோ கம்பனி நடவடிக்கை எடுத்துள்ளது. |

## 4. கணக்கு ஏடுகள் மற்றும் ஆவணங்கள் பேணிச்செல்லப்படாமை.

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கம்பனியின் 2024 ஆம் ஆண்டிற்குரிய பணிப்பாளர் சபைத் தீர்மானம், வங்கி இணக்கக்கூற்று, காசேடு 2024 ஆம் ஆண்டின் போது மஹபொல நிதியத்திலிருந்து கிடைத்த ரூபா 7,150,000 ஆன பெறுவனவுகளுக்குரியதாக விநியோகிக்கப்பட்ட அடியிதழ், முதலீடு தொடர்பான விபரம் மற்றும் நீதிமன்ற நடவடிக்கைகள் தொடர்பான விபரங்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. | ரூபா 7,150,000 ஆன பெறுவனவுகளுக்குரியதாக அடியிதழ் விநியோகிக்கப்படவில்லை. இந்த பெறுவனவுகள் தொடர்பாக பணிப்பாளர் சபையால் அங்கீகரிக்கப்பட்ட ஆவணங்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. முதலீடு தொடர்பான அறிக்கை மற்றும் மீதி உறுதிப்படுத்தல் கடிதம் மஹபொல நிதியத்தின் மூலம் கோரப்பட்ட போதும் 2025.11.25 ஆந் திகதி வரையிலும் கிடைத்திருக்கவில்லை. | உரிய சகல ஆவணங்கள் அறிக்கை மற்றும் அறிக்கைகள் பேணிச்செல்ல வேண்டியிருந்ததுடன் அவற்றை கணக்காய்விற்குச் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |